Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 09 சனிக்கிழமை (25-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 355

# புனானையில் அதிரடி 11 படையினர் பலி!

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், நவம்பர் 25

மட்டக்களப்பு மாவட்டம் புனானையில் ரோந்து சென்றுகொண்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 11 படையினர் கொல்லப்பட்டனர். 2 அதிகாரிகளும் 3 படையினரும் காயம் அடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெலிகந்தைக்கு கிழக்கே 17 கிலோ மீற்றர் தொலைவில் புனானை அமைந்துள்ளது.

நேற்றுக் காலை 10-42 மணியளவில் புனானை இராணுவ முகாமில் இருந்து தேக்கஞ்சேனை இராணுவ முகாமை நோக்கி ரோந்து சென்றபோதே படையினர் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

பத்து நிமிடம் மட்டுமே புலிகளின் தாக்குதல் நீடித்தது. இத் தாக்குதலின்போது ஏனைய படையினர் தப்பி ஓடிவிட்டனர்.

படையினருக்கு உதவுவதற்காக தேக்கஞ்சேனை இராணுவ முகாமில் இருந்து வந்த படையினர் மீதும் புலிகளின் மற்றொரு அணி தாக்குதல் நடத்தியது.

தாக்குதலின் போது லெப். சந்திரசேகர். லெப். ஆதவன் ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

ஏ. கே. எல். எம். ஜி. — 1, ஏ.கே. ரக துப்பாக்கி — 10, செற்— 1, ஏ.கே.எல்.எம்.ஜி. றம் மகசின்— 1, கைக்குண்டுகள்— 4, கிளைமோர்— 1, எக்ஸ்புளோடர் — 1, வயர் றோல் — 1, ஏ.கே.மகசின் — 22, ஐ. எம். ரவை — 250 ஆகிய ஆயுதங்கள் படையினரிடம் இருந்து புலிகளால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# துண்டியில் நேற்று சமர்!

## சொத்துகள் பெருநாசம்

சாவகச்சேரி, நவம்பர் 25

அரியாலைப் பகுதியில் இருந்து கொழும்புத்துறையை நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் துண்டிப் பகுதியில் நேற்று நண்பகல் கடும் சண்டை இடம்பெற்றதாக களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினரின் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களினால் நகரிலிருந்த பொதுமக்களின் உடைமைகளுக்கு நேற்றும் பெரும் சேதம் ஏற்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் படையினரின் முன்னேற்றம் ஓரளவு மந்தநிலையில்

## பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்துக்கான சண்டை ஓரளவு மந்தநிலையில் நடந்து கொண்டிருக்கையில், இராணுவம் ஏற்கனவே அடுத்த கட்டத்தைப் பற்றி சிந்தித்து வருகிறது.

மேற்கண்டவாறு பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார்.

பெரும்பாலான மக்கள் மூன்று வாரங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தைவிட்டு ஓடிவிட்டாலும் அங்கே சிவில் நிர்வாகம் ஒன்றை அமைக்க அரசு ஆவலாக இருக்கிறது.

பல நூற்றுக்கணக்கான பொலீஸார் ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டனர்.

ஆனால் பெருநிலப்பகுதியில் புலிப்படையினரை அவர்களின் காட்டு முகாம்களில் தாக்குவதற்காக முன்நிலைத் துருப்புக்கள் அனுப்பப்படும்போது யாழ். குடாநாட்டை கட்டுப்பாட்டில் வைத்திருக்க மேலும் பெரிய அளவிலான படை தேவைப்படும்.

இராணுவத்துக்கு மேலும் ஆட்கள் சேர்ப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

### வியாழனன்று 4 படையினர் பலி 30 பேர் காயம்

கொழும்பு, நவ. 25

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடனான சமரில் நேற்று முன்தினம் நான்கு படையினர் கொல்லப்பட்டனர் என்றும்—

3 அதிகாரிகள் உட்பட 30 படையினர் காயம் அடைந்தனர் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

புலிகளின் மோட்டார் ஷெல் தாக்குதல்களினாலேயே படையினருக்கு சேதங்கள் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### எதிர்பாராத வெடி விபத்து!

## சாவகச்சேரிப் பகுதியில் 4 பேர் பலி 62 பேர் காயம்

### புலிகள் வேதனை தெரிவிப்பு

சாவகச்சேரி, நவ. 25

சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதியில் புலிகளின் தங்ககம் ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட எதிர்பாராத வெடிவிபத்தில் நான்கு பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்; 62 பேர் காயமடைந்துள்ளனர்; ஐந்து வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன; சில வீடுகளினதும் கடைகளினதும் கூரைகள் வெடி அதிர்வால் சேதமுற்றுள்ளன.

இந்த வெடி விபத்தில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த வெடிவிபத்தில் மக்களது உயிருக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்டுள்ள இழப்புகளையிட்டு புலிகள் இயக்கம் தனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துக் கொள்கின்றது.

காயமடைந்தவர்களில் பெரும்பான்மையினர் ஏற்கனவே சொத்து சுகங்களை இழந்த நிலையில் இடம்பெயர்ந்து வந்து புகலிடம் தேடி இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத் தமிழர்களின் பிரச்சினை குறித்து

# அமெரிக்கா வெளியிட்ட கருத்தை ஆட்சேபித்து கிளின்டனுக்கு செய்தி

## வெகுஜன அமைப்புகள் ஒன்றியம் அனுப்பியது

சாவகச்சேரி, நவ. 25

ஈழத் தமிழர்களின் பிரச்சினை குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்தும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய விவகாரங்களுக்கான பணியகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரினால் வெளியிடப் பட்டதாகக் கூறப்படும் கருத்தை ஆட்சேபித்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு செய்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உண்மைக்கு மாறான இத் தகவல் தமிழ் மக்களுக்கு பேரதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்து —

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியமே அமெரிக்க ஜனாதிபதிக்கு செய்தி அனுப்பி வைத்திருக்கின்றது அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் யாழ்ப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மந்திகையில் யாழ். ஆஸ்பத்திரி இயங்குவதற்கு அமைச்சு அனுமதி

## மூன்று மாத காலத்துக்கு

யாழ். போதனா வைத்திய சாலை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் மூன்று மாதங்களுக்கு இயங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இந்தஅனுமதியை சுகாதார அமைச்சு வழங்கியிருப்பதாக —

போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரத்தினம் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக —

கொழும்பிலிருந்து மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை நிர்வாகத்துக்கு நேற்று அறிவித்தார்.

அரசாங்கப் படைகள் நடத்தும் 'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கை காரணமாக —

மக்கள் வலிகாமத்திலிருந்து வெளியேறி இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து —

யாழ். போதனா வைத்திய சாலை (சுகாதார அமைச்சின் அனுமதியின்றி) மந்திகைக்கு மாற்றப்பட்டது.

ஆஸ்பத்திரிக்கு பாதுகாப்பு வழங்கி வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்மாறி பருத்தித்துறையில் இயங்குவது தெரிந்ததே. [அ-173]

# தப்பி ஓடிய படையினருக்கு அரசு பொது மன்னிப்பு

## மீண்டும் வந்துசேர அழைப்பு

கொழும்பு, நவ. 25

கடந்த காலங்களில் இராணுவத்தில் இருந்து சொல்லிக் கொள்ளாது ஓடியவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்க்கும் நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது.

விடுமுறைஇன்றி சேவைக்கு சமுகமளிக்காதிருக்கும் படையினருக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட்டிருப்பதாகவும்—

அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் இப்படியானவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50க்கு அதிகமான புலிப்படையினர் கொழும்பு நகருக்குள் ஊடுருவல்

## தற்கொலைத் தாக்குதலுக்கு தயாராகின்றனராம்

கொழும்பு, நவ. 25

அரசியல் தலைவர்களைக் கொல்வது மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு நிலையங்கள், பொருளாதார மையங்கள் போன்றவற்றை அழிப்பது ஆகிய சதித் திட்டங்களுடன் ஐம்பதுக்கும் அதிகமான — தற்கொலைத் தாக்குதல் — போராளிகளை விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் கொழும்புக்கு அனுப்பியிருப்பதாகவும் —

இவர்கள் அனைவரும் தலைநகருக்குள் ஊடுருவி, அங்குள்ள தமது உளவு ஆட்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் —

பொலீஸ் புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

வார இறுதியை அண்மித்து வரும் நாட்களில் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் வார இறுதி பிரசாரங்களில் அதிக இடம்பெறலாம் என்பதால் இந் நாட்களில் தாக்குதல்களை நடத்தும் பாணியை விடுதலைப் புலிகள் பின்பற்றி வருவதாகவும் —

இதனால் வார இறுதியை அண்டிய நாள்களில் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதி தீவிரப் படுத்தப்படுவதாகவும் —

அப்பத்திரிகைச் செய்தி தெரிவித்தது. தாக்குதல்களுக்கு முன்னேற்பாடாக — பல டசின் சிறிய ரக ஆயுதங்களையும், சிருடைகளையும் கொழும்பில் பல்வேறு பாதுகாப்பான இடங்களுக்கு புலிகள் கொண்டு வந்து சேர்த்து பதுக்கி வைத்திருப்பதாகஅறிய வருவதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

கொழும்புத் துறை முகம் மற்றும் விமான நிலையம் ஆகியனவே அழிக்கப்படுவதற்கான இலக்குகளாக இருக்கும் என்பது கிடைக்கும் தகவல்களில் இருந்து தெரியவருவதாக புலனாய்வு வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இதனால் இத்தகைய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பல மடங்கு தீவிரப் படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## டெலிக் கற்கை நெறி இறுதிப்பரீட்சை

டெலிக் கற்கை நெறியினைத் தொடர்பவர்களுக்கான இறுதிப்பரீட்சை அடுத்த மாதம் 7ஆம், 8ஆம், 9 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை வவுனியா கல்வி அலுவலகத்தில் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்தில் இயங்கும் கல்வித் திணைக்களத்துக்கு அடையாள அட்டையுடன் வருமாறு வலயம் ஒன்றின் பணிப்பாளர் கேட்டுள்ளார். [இ-3]

## எவ். எம். அலைவரிசையில் வடக்குக்கு விசேட ஒலிபரப்பு

### அரசு அவசர முயற்சி

கொழும்பு, நவ. 25

வடபகுதியில் விசேட எவ். எம். அலைவரிசையில் வானொலி ஒலிபரப்புச்சேவை ஒன்றை மிக விரைவில் ஆரம்பிக்க அவசர ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமேற்கு மாகாண ஒலிபரப்பு நிலையத்திலிருந்து இந்த அலைவரிசையில் ஒலிபரப்பு மேற்கொள்ளப்படும்.

இதற்காக மாத்தறை மாவட்டம் வீரக்கெட்டியவில் உள்ள ஒலிபரப்பு மையத்திலிருந்த உபகரணங்கள் அவசர அவசரமாக வடமேற்கு மாகாண ஒலிபரப்பு நிலையத்துக்கு எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## யாழ். பகுதியில் படையினர் வீடு வீடாகச் சோதனை

கொழும்பு, நவ. 25

விடுதலைப்புலிகளின் கோட்டையான யாழ்ப்பாணத்தில் வெடிப்பொருள்களைக் கண்டு பிடிப்பதற்காக தாம் கைப்பற்றியஇடங்களில் வீடு, வீடாக சோதனை நடத்தி வருகின்றனர் என்று இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

ஆயிரக் கணக்கான படையினர் கவசவாகனங்கள், கனரக டாங்கிகள் மூலம்யாழ். நகரை சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகவும் —

படையினரில் ஒரு தொகுதியினர் அரியாலையில் இருந்து கிழக்குநோக்கியும் இன்னொரு தொகுதியினர் கொழும்புத் துறையில் இருந்து மேற்கு நோக்கியும் முன்னேறுவதாகவும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## கூட்டணி தங்கத்துரை அரசில் சேருவார்?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ தங்கத்துரை அரசாங்கத்தில் சேரும் எண்ணத்தைக் கொண்டிருக்கின்றாரா என்ற ஐயப்பாடு கொழும்பு தமிழ் அரசியல் வட்டாரங்களில் நிலவுவதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆற்றிய உரையையும், பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அவர் விதித்த நிபந்தனைகளையும் அங்கீகரிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி மறுத்த போதிலும் —

அக்கட்சியின் உறுப்பினரான தங்கத்துரை அவற்றை வரவேற்றிருக்கின்றார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது பிரேரணைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதை கலாநிதி நீலன் திருச்செல்வம் போன்றோர் எதிர்த்தனர்.

ஆனால் அமைச்சர் அஷ்ரப்புக்கு ஆதரவாக தீர்க்கமான நிலையை எடுத்துக் கொண்ட தங்கத்துரை அமைச்சரை ஆதரித்தும் — பிரேரணையை எதிர்த்தும் — நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். — இவ்வாறு அந்தப் பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

தனது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழர்களுக்கு திருகோணமலைத் துறைமுகத்தில் அதிக வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் அமைச்சர் அஷ்ரப்புக்கு அதிக ஆதரவை அவர்காட்டியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

பொது தேர்தலுக்கு முன் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு பிரசாரக் கூட்டத்தில் வைத்து —

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரேயொரு எம். பி. பதவி கிடைத்தால் அது இரா. சம்பந்தனுக்கே வழங்கப்படும் என அறிவித்திருந்த தங்கத்துரை —

கூட்டணிக்கு ஓர் எம். பி. பதவி — அதுவும் தனக்கு — கிடைத்த பின்னர், சம்பந்தனுக்கு அதனை விட்டுக் கொடுப்பதற்கு வசதியாக அப்பதவியை விட்டு இராஜினாமாச் செய்ய மறுத்து வருவது திருகோணமலை கூட்டணி வட்டாரங்களுக்குள் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமது பிரதேசத்தில் — தமது கட்சிக்குள் — நெருக்கடியையும் எதிர்ப்பையும் எதிர்நோக்கியுள்ள தங்கத்துரை, அதனால் மனம் நொந்து கூட்டணியை விட்டு விலகியிருக்க முயற்சிக்கக் கூடும் என மற்றொரு தகவல் குறிப்பிட்டது. (உ)

## இறுதி வீரவணக்கமும் வித்துடல்கள் விதைப்பும்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் "சூரியப் பிரகாசம்" நடவடிக்கையின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கைகள் மணிவண்ணன் (குணபாலச்சந்திரன் ரமேஷ், வன்னியர் கோவிலடி, வயாவிளான் தெற்கு.), வீரக்கோன் (கதிரேசன் கணேந்திரன், கட்டுவன் மேற்கு,தெல்லிப்பளை) ஆகியோரின் வித்துடல்கள் இன்று 25 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றோரின் வருகைக்காக வைக்கப்படும் என்று மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

அதன் பின்னர் இரு மாவீரர்களின் வித்துடல்களும் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்துக்காக அங்கு வைக்கப்பட்டிருக்கும்.

அங்கு மாலை 4-00 மணியளவில் நடைபெறும் இறுதி வீரவணக்கக் கூட்டம் நிறைவுற அங்கிருந்து வித்துடல்கள் அணிவகுப்பு மரியாதைகளுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படும்.

அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழிகளில் வித்துடல்கள் விதைக்கப்படும். (இ)

## மந்திகை ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி

வடமராட்சி, நவ. 25

மந்திகையில் இயங்கும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வார்டுகளில் நோயாளர்கள் நிரம்பி வழிகிறார்கள்

வார்டுகளில் இடமின்மையால் விறாந்தைகள், வார்டுகளுக்குச் செல்லும் பாதைகள் என்பனவற்றில் நோயாளர்கள் படுக்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பாய்கள் வழங்கப்பட்டுள்ளன .

இதேவேளை அதிகரித்து வரும் நோயாளர்களின் வசதி கருதி மேலும் பாய்களைத் தந்துதவுமாறு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை நிர்வாகம் யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியைக் கேட்டுள்ளது. [இ-173]

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதால் புலிகளை தோற்கடித்துவிட முடியாது

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, நவ. 25

யாழ். நகரைக் கைப்பற்றுவது நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட அரசு எடுக்கும் முயற்சியில் கிடைக்கும் முதலாவது வெற்றி ஆகும். ஆனால் இதன்பின்னர் இன்னும் எவ்வளவோ சாதிக்க வேண்டி உள்ளது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதினால் மாத்திரம் புலிகளைத் தோற்கடித்துவிட முடியாது.

ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் இரவு ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டங்களில் முன்னைய ஜனாதிபதிகள் கலந்துகொள்வதில்லை என்றும் ஜனாதிபதி சார்பாக பாஸ்கரலிங்கமே கலந்து கொண்டார் என்றும் இதனை படைத் தளபதிகள் தமக்குச் சொன்னபோது தாம் ஆச்சரியப்பட்டதாகவும் சந்திரிகா மேலும் கூறினார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கையின் முதலாவது [illegible] அரசியல் தீர்வு யோசனைகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் சந்திரிகா தெரிவித்தார். (இ)


## தொடர்பு கொள்ளவும்

ரேஸ்ற்லைன் நிறுவனத்திற்கு போத்தல்கள், பழங்கள், எசன்ஸ்கள் மற்றும் மூலப்பொருள்கள் விநியோகம் செய்வோர் அனைவரும் ரேஸ்ற்லைன் நிறுவனத்துடன் புதிய முகவரியில் —

**ரேஸ்ற்லைன் இண்டஸ்றீஸ், பருத்தித்துறை வீதி, நெல்லியடி**

(நெல்லியடி இன்டஸ்றியல் இற்கு அருகில்)

தொடர்பு கொள்ளும்படி கேட்க்கப்படுகின்றனர்

குறிப்பு:- திரு. கந்தசாமி (தம்பர் - மருதனார்மடம் சந்தை) அவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். (39379)



## ஹற்றன் நஷனல் வங்கி

# விசேட கருமபீடம்

சாவகச்சேரி

தென்மராட்சி வாழ் வாடிக்கையாளர்களின் வசதி கருதி சாவகச்சேரியில் எமது வங்கியின் விசேட கருமபீடம் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை (27 - 11 - 95) ஆரம்பிக்கப்பட உள்ளது.

இடம்:- ரயில் நிலைய வீதியில் உள்ள சட்டத்தரணி ரி. வேலாயுதம் அவர்களின் இல்லம்.

இயங்கும் நாள்கள்:-
திங்கள், புதன், வெள்ளி.

முகாமையாளர்
ஹற்றன் நஷனல் வங்கி

[சி-3107]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு 10 ஆயிரம் பேரை புதிதாக திரட்ட அரசு நடவடிக்கை

## 3 வார குறுகிய பயிற்சியுடன் சேவையில் ஈடுபடுவர்

கொழும்பு, நவ. 25
இலங்கை இராணுவத்தின் தரைப்படைக்கு பத்தாயிரம் பேர் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

வடக்கில் பாதுகாப்புப் படைகளின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கும்—

அந்தப் பகுதியில் நிர்வாகத்தை மீண்டும் ஸ்திரப்படுத்துவதற்கும் — ராணுவ வரலாற்றில மிகப் பெரும் எண்ணிக்கையானோரை சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ள பத்தாயிரம் பேருக்கும் மிகக் குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அடுத்த ஜனவரி மாதம் முதல் அவர்கள் ராணுவ சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

குறைந்தபட்சம் ஆண்டு 8 அல்லது ஆண்டு 7 சித்தி அடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் இவர்களுக்கு மாதம் ஆறாயிரம் ரூபா சம்பளமும் ஊக்குவிப்புக்களும் வழங்கப்படும் என்றும் பிரிகேடியர் சரத் முனசிங்க மேலும் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை 27 நிலையங்களில் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்றும் அவர் கூறினார். (இ)

# கைப்பற்றும் பகுதிகளில் தமிழரை பலாத்காரமாக குடியேற்ற முயற்சி

சாவகச்சேரி, நவ. 25
யாழ்ப்பாணத்தை அரச படைகள் கைப்பற்றும் பட்சத்தில் —

பலாத்காரமாக தமிழ் மக்களை அங்கு குடியேற்ற பல நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளலாம் என கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

தமது சொந்தஅலுவல்களுக்காக கொழும்பு சென்று அங்கு விடுதிகளில் தங்கியுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர்கள் பலரை பொலிஸார் அழைத்துச் சென்று தனியான இடத்தல் வைத்திருப்பதாகவும் —

அவர்களது அடையாள அட்டையை பெற்றுக்கொண்டு தற்காலிகபாஸ் ஒன்றைபொலிஸார் அவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் —

அந்தப்பாஸுடன் அவர்கள் வெளியே சென்று தமது வேலைகளை முடித்துத் திரும்புமாறுபணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதே போன்று —வவுனியாவுக்குச் செல்பவர்களும் வவுனியா ரயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள அகதி முகாமில் தடுத்து வைக்கப்படுவதாகவும் —

அவர்களின் அடையாளஅட்டையை பெற்றுக் கொண்டு வழங்கப்படும் பாஸுடன் அவர்கள்வெளியேசெல்ல அனுமதிக்கப்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அரச வேலைகள் தொடர்பாகச் செல்பவர்களை வடக்கே வர அனுமதிக்கும் பொலீஸார் ஏனையோரை அகதி முகாமில் தடுத்து வைத்துள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண விலாசம் கொண்ட அடையாளஅட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே தடுத்து வைக்கப்படுவதால்—

இது கட்டாய குடியேற்றத்துக்கான ஆயத்தமாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (இ-3)

### சரசாலை, எழுதுமட்டுவாள்

# மருத்துவ நிலையங்களில் ஏராளமானோர் சிகிச்சை

தென்மராட்சிப் பகுதியில் சரசாலை, எழுதுமட்டுவாள் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சை நிலையங்களில் தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சரசாலை கிராம சபை கட்டடத்திலும், எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேசா வித்தியாலய ஆய்வு கூடத்திலும் இந்த சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த சிகிச்சை நிலையங்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் சிகிச்சை பெறுவதால் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, பளை வைத்தியசாலை ஆகியவற்றுக்கு செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைவடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-117)

# குடாநாட்டுக்கான மண்எண்ணெய் உணவு கோட்டா அரைவாசி வெட்டு

யாழ். மாவட்டத்துக்கான உணவு மற்றும் மண்எண்ணெய்க்கான மாதாந்த கோட்டாக்களை அரைவாசியாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு குறைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் மொத்த சனத்தொகையான 7 லட்சம் பேரில் 2 லட்சம் அளவில் மக்கள் வன்னிக்கு செல்ல குடாநாட்டின் தேவையை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அரைவாசியாக வெட்டியுள்ளது.

இந்த முடிவின்படி மாதாந்தம் 2 ஆயிரத்து 500 பரல் மண்எண்ணெய்யும் 5 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்களுமே இனி கப்பல் மூலம் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டுத் தேவையில் 50 சதவீதத்தை வெட்டிய போதும்—

தாண்டிக்குளம் ஊடான போக்கு வரத்து பாதிக்கப்பட்டதால் வெட்டப்பட்ட அளவு பொருள்களை வன்னிக்கு அனுப்புவதும் சாத்தியம் இல்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. (இ-3)

# தமிழர் மட்டுமன்றிச் சிங்களவரும் கொழும்பில் பீதியுடன் வாழ்கின்றனர்

அடுத்துவரும் நாட்களில் என்ன நடக்குமோ, எது நடக்குமோ என்ற அச்ச உணர்வு தெற்கில் உள்ள மக்களிடையே ஏற்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றும் பட்சத்தில், சிங்களவர்கள் தம்மை தாக்கலாம் என்ற அச்சம் தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும்—

மாவீரர் நாளையொட்டி விடுதலைப் புலிகள் தெற்கில் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் சிங்கள மக்களிடையேயும் — ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலும் அதற்கு அண்டிய பகுதிகளிலும் மாலையானதும் கடைகள் மூடப்படுவதாகவும் அவர் கூறினார். (இ-3)

# தொண்டர் அமைப்புகள் பொருள்கள் எடுத்துவர அரசு தொடர்ந்து தடை!

சாவகச்சேரி, நவ. 25
வடக்கில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளத் தேவையான உணவுப் பொருள்களை எடுத்துவர சர்வதேச தொண்டர் அமைப்புக்களுக்கு அரசு தொடர்ந்து தடைவிதித்து வருவதாக சர்வதேச தொண்டர் அமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை அரசு அனுப்பி வருவதாகவும்—

வடக்கில் உள்ள மக்களுக்கு உணவு வழங்க தொண்டர் நிறுவனங்கள் விரும்பும் பட்சத்தில், அவற்றை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் கையளிக்குமாறும்— அரசு தெரிவித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் தலைமையகங்கள் உணவு, பால்மா வகைகளை வழங்க தயாராகவிருக்கின்றபோதும் —

அரசு விதித்துள்ள தடையால் உணவுப் பொருள்களை இங்கு எடுத்துவர முடியாதுள்ளதாகவும்—

அதே நேரம் — உணவுப் பொருள்கள் தவிர்ந்த நிவாரணப் பொருள்களை எடுத்துவர அரசு அனுமதிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (இ-3)

## வைப்பகத்துக்கு வருமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
பின்வருவோரை நாளை 26 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கச்சாய் வீதி, சாவகச்சேரியிலுள்ள தமிழீழ வைப்பகத்திற்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது.

★ திருமதி பத்மாவதி பால சுப்பிரமணியம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

★ சுப்பிரமணியம் ஞானசுந்தரம், முத்தகட்டுமடம் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ பாலகிருஷ்ணன் கமலேஸ்வரி (கமலா), இல. 9 ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ தவசி பிள்ளையார், 1 ஆம் வீதி, அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (இ)

## போர்ப் பிரகடன பிரசாரம்

சாவகச்சேரி, நவ. 25
வடமராட்சியில் தற்போது வீடு, வீடாகச்சென்று போர்ப் பிரகடன பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (இ-90)

# வன்னி செல்வோருக்கு வயல்களில் வேலை வாய்ப்பு

தென்மராட்சி, நவ. 25
வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் சென்றோரில் பலர் தாம் தங்கியுள்ள உறவினர்களின் காணிகளில் வீடுகளை அமைத்து வருகின்றனர்.

வன்னிப் பகுதியில் தற்போது வயல்களில் வேலை நடைபெறுவதால் இடம் பெயர்ந்து இப்பகுதிகளுக்கு வந்துள்ள மக்களுக்கு களை பிடுங்கும் வேலை கிடைத்துள்ளது.

சிலர் தாம் தங்கியுள்ள காணிகளில் மேட்டு நிலப்பயிர் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கான உதவிகளை அங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்றன. (இ-117)

# மக்கள் கூடுதலாக வாழும் இடங்களில் தொற்றுநோய்

எழுதுமட்டுவாள், நவ. 25
இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தொற்று நோய்கள் பரவி வருகின்றன.

வயிற்றோட்டம், கண் நோய் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட நோய்களே கூடுதலாக பரவி வருவதாக தெரிய வருகிறது.

பளையில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் இத்தகைய நோய்களால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தினமும் மேற்படி வைத்தியசாலையில் 700க்கும் கூடுதலான மக்கள் சிகிச்சைக்காக வருவதாக தெரிவிக்கப்பட்டது.

வெளிநோயாளர் பகுதியில் கடமையாற்றுவதற்கு போதிய வைத்தியர்கள் மற்றும் மருந்தாளர்கள் இல்லாததால் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. (இ-152)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மேலதிக விடுதி

சாவகச்சேரி, நவ. 25
சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் தற்போது ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைச் சமாளிக்குமுகமாக மேலும் ஒரு தற்காலிக விடுதி அமைக்கப்பட்டு அதில் நோயாளர்கள் தங்க விடப்பட்டுள்ளனர். (இ-13)

## 2 கப்பல்களில் பொருள்கள்

வடமராட்சி, நவ. 25
ஹபரண, குமண ஆகிய இரு கப்பல்களிலிருந்து இன்று முதல் ஒரே நேரத்தில் பொருள்கள் இறக்கப்படவுள்ளன. (இ-173)

## சத்திய வேள்வி காப்பாய்!

தொற்றிய பகைதனை தீர்க்க
தூக்குவாய் கையிலே துவக்கு
சுற்றியே நிற்கிறான் ''ஆமி''
சுதந்திர மண்ணிலே வந்து
பற்றியே வைக்கிறான் கொள்ளி
பாசமிகு பூமியை அழிக்க
சற்றுமே துயிலாமல் எழுவாய்
சத்திய வேள்வி காப்பாய்!

- காரை. எம். பி. அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவிக்காத புதிய கூரைத் தகரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 501 C/o உதயன், சரசாலை, சாவகச்சேரி. (ஈ 101)

# குமணவில் வந்த தபால்கள் இன்று முதல் விநியோகம்

## வழங்கும் இடங்கள் அறிவிப்பு

தென்மராட்சி, நவ. 25

குமண கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்பட இருப்பதாக யாழ். பிரதம அஞ்சல் அதிபர் திரு. க. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகப் பிரிவுக்கு உட்பட்ட தபால்கள் தரம் பிரிக்கப்படுவதாகவும் அவை திங்கட்கிழமை தொடக்கம் பொது மக்களுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் கருமபீடத்தில் வைத்து வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று சனிக்கிழமை விநியோகிக்கப்பட உள்ள தபால்கள் பற்றிய விவரம் வருமாறு:-

தெல்லிப்பளை அஞ்சல் அலுவலக தபால்கள் மீசாலை உப அஞ்சல் அலுவலகத்திலும்—

காங்கேசன்துறை அஞ்சல் அலுவலக தபால்கள் சரசாலை உப அஞ்சல் அலுவலகத்திலும்—

வட்டுக்கோட்டை அஞ்சல் அலுவலக தபால்கள் கச்சாய் உப அஞ்சல் அலுவலகத்திலும்—

அளவெட்டி அஞ்சல் அலுவலக தபால்கள் மந்துவில் உப அஞ்சல் அலுவலகத்திலும்—

சுழிபுரம் மற்றும் காரைநகர் அஞ்சல் அலுவலக தபால்கள் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்திலும்—

கொக்குவில் அஞ்சல் அலுவலக தபால்கள் மிருசுவில் உப அஞ்சல் அலுவலகத்திலும்—

மானிப்பாய் அஞ்சல் அலுவலக தபால்கள் சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலைய வீதியில் உள்ள சு. சோமநாதன் என்பவரின் வீட்டிலும்—

சங்கானை, பண்டத்தரிப்பு, இளவாலை, உரும்பிராய் அஞ்சல் அலுவலக தபால்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் வைத்து வழங்கப்படும்.

ஏனைய அஞ்சல் அலுவலகங்களின் தபால்கள் விநியோகம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## அறிவித்தல்

36, பாரதி வீதியில் இயங்கிய
சுஜா போட்டோ உரிமையாளர்
சிவராஜா ஆகிய என்னை சீட்டு, படங்கள் சம்பந்தமாக கீழ் உள்ள முகவரியில் 26-11-65 மாலை 3 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் சந்திக்கவும்,

த. இராசரத்தினம்
'மதிபவனம்'
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை.

(39281)

## வதிவிட விவரம் தரவும்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும் யாழ். பல்கலைக்கழக பௌதீக பீடத்தில் விரிவுரையாளராக பணிபுரிபவருமாகிய திரு. அருளானந்தம் அவர்களை அவருடைய தற்போதய வதிவிடம் பற்றிய விவரத்தை சரசாலையில் அமைந்திருக்கும் உதயன் பத்திரிகை பணிமனையில் வழங்கும்படி சிவசுப்பிரமணியம் ஆசிரியர் வேண்டுகிறார்.

(சி/3106)

## அவசியம் சந்திக்கவும்

நமசிவாயம் நடராசா, இல. 153, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், அவர்களை உடனடியாக கீழ்க்காணும்முகவரியில் சந்திக்கும்படி வேண்டுகின்றேன்.

பா. தவபாலன்
[சட்டத்தரணி]

மே/பா. சரா மாஸ்டர்,
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (393g7)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 15 — 02 — 1935



உதிர்வு: 05 — 12 — 1994

### அமரர் நல்லதம்பி சிவலிங்கம்

[பிரதம லிகிதர், பிரதேச செயலகம், பருத்தித்துறை]

திதி: 25 - 11 - 95

''உறங்குவது போலுஞ் சாக்காடு'' என்பதனை எடுத்துக்காட்டிய எங்கள் உத்தமற்கு, நந்தாவிளக்கனைய எங்கள் நாயகற்கு, சிந்தாத கண்ணீரைச் சிந்தி நின்று ஆன்ம சாந்திக்காக அஞ்சலி செலுத்தும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

துன்னாலை,
கரவெட்டி. (39361)

## மாஹோவில் 2,500 பரல் மண்எண்ணெய்

சாவகச்சேரி, நவ. 25

இரண்டாயிரத்து 500 பரல் மண்எண்ணெய் மற்றும் ப. நோ. கூ. சங்கங்களுக்குதேவையானபொருள்களை 'மாஹோ' கப்பலில் எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் யாழ். மாவட்டத்துக்கான நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் ''லங்காகல்யாணி'' கப்பல் ஓரிரு நாள்களில்வடக்கு நோக்கிப் புறப்படவிருப்பதாகவும் —

அதன் பின்னர் ''மாஹோ'' கப்பலில் பொருள்கள் ஏற்றும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## மந்திகையில் மேலும் 2 கிளினிக்குகள்

வடமராட்சி, நவ. 24

யாழ். போதனாவைத்தியசாலையினால், மந்திகையிலுள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மேலும் இரு கிளினிக்குகள் (சிகிச்சைப் பிரிவுகள்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கண் கிளினிக் திங்கள், புதன், வெள்ளி ஆகியநாள்களில் நடத்தப்பட்டு வருகிறது. அத்துடன் பிரதி வியாழக்கிழமை தோறும் மனநோய் கிளினிக், பொது வைத்திய கிளிணிக் ஆகியனவும் நடத்தப்பட்டுவருகின்றன.

நேற்றைய தினம் முதன் முதலாக ஆரம்பமான பொது வைத்திய (மெடிக்கல்) கிளினிக்கில் [illegible] எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

## கீழே குறிப்பிடப்பட்ட சபைகளின் விசுவாசிகளுக்கு

உங்கள் சபைப் போதகரை 04-12-95 க்கு முன்னர் அவரது முகவரியில் சந்திக்கவும்.

★ சியோன் தேவாலயம்:
மதுவன் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை,

★ எபனேசர் தேவாலயம், ★ அசெம்பிளி ஒவ் கோட், யாழ்ப்பாணம் ★ அசெம்பிளி ஒவ் கோட், மானிப்பாய்:
தும்பளை சிவப்பிரகாச ம. வி.
பருத்தித்துறை.

★ நாற்சதுர சுவிசேஷ சபை
பெருங்குளம் சந்தி, தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

★ அப்போஸ்தல சபை
புத்தூர் சந்தி
மீசாலை வடக்கு, மீசாலை.

★ கல்வாரி பூரண சுவிஸேச சபை ★ அசெம்பிளி ஒவ் கோட், கோப்பாய்.
அசெம்பிளி ஒவ் கோட், சாவகச்சேரி,
[உதவி அரச அதிபர் பணிமனை அருகே]
சாவகச்சேரி.

★ எக்காளத்தொனி சபை
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

★ ஜெப வீடு
மே/பா கே. கதிரவேலு,
முருகமூர்த்தி ஒழுங்கை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ அசெம்பிளி ஒவ் கோட், சுன்னாகம்
சரஸ்வதி வீடு,
வெள்ளம் போக்கடி,
அல்லாரை வடக்கு,
மீசாலை.

[39280]

## ஆசிரியர்கள் உடன் சந்திக்கவும்

★ யா/ கன்னியர்மடம் ம. வி.
★ யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
★ யா/ சென் ஜேம்ஸ் மகளிர் வித்.
★ யா/ சென் அன்ரனீஸ் மகளிர் றோ. க. வித்.
★ யா/ கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் ம. வித்.
★ யா/ யசிந்தா றோ. க. பாடசாலை பண்டத்தரிப்பு
★ யா/ சென் ஆன்ஸ் றோ. க. பாடசாலை, மானிப்பாய்

மேற்படி பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் பின்வரும் திகதிகளில் (25, 26, 27, 28, 29-11-95) மிருசுவிலில் உள்ள திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கு வந்து தமது காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அவ்வப்பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

அதிபர்கள்

(39377)

## யா, கனகரத்தினம் ம. ம. வி. சம்பளக் கொடுப்பனவு

மேற்படி பாடசாலை ஆசிரியர்கள், ஊழியர்கள் தமது சம்பளத்தை சாரதா ஒழுங்கை, சங்கத்தானையிலுள்ள அதிபர் இல்லத்தில் சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்

(39282)

## சிவலிங்கம் வைத்தியசாலை

புதிய முகவரி:-

திரு. விமல் வீட்டிற்கு எதிரில்
உசன்.

வைத்திய கலாநிதி
சி. ஸ்ரீஜீவகன்
M. D. H. (INDIA), D.A.M. (Cey)
D. AC. (Cey)

(39276)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கிளாலித் தடை

அரசாங்கம் கிளாலிப் பயணத்துக்குத் தடை விதித்திருக்கிறது.

கிளாலிக் கடல் நீரேரி ஊடாகப் பயணம் செய்வதற்கு, அங்கு படகுகளைச் செலுத்துவதற்கு, காரைநகரில் உள்ள வடபகுதிக் கடற்படைத் தளபதியிடம் அனுமதி பெற வேண்டும். அவரின் அனுமதிச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வோர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுவர் என்பது அரசாங்கத்தின் நீண்ட அறிவிப்பின்— வர்த்தமானி அறிவித்தலின்— ஒரு பகுதி.

கிளாலிப் பாதையை தடை செய்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் உத்தரவு பிறப்பித்ததை வடபகுதி மக்கள் எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.

ஆனால் அந்தத் தடை, நடைமுறையில் அர்த்தமற்றதாகிவிட்டதையும், தமிழ் மக்கள் தடையைப் பகிரங்கமாக மீறி கிளாலியூடாகப் பயணம் செய்ததையும் கடற்படை அதிகாரிகளும், இந்த அரசின் அங்கத்தவர்களும் அறியாதவர்கள் அல்லர்.

தமிழீழக் கடற்பரப்பு முழுவதும் விடுதலைப் புலிகளின் [கடற்புலிகளின்] கட்டுப்பாட்டில் இருப்பதையும் அரசும், கடற்படை அதிகாரிகளும் மறந்திருக்கமுடியாது. கிளாலிப் படகுச் சேவை புலிகளின் நிர்வகாகத்திலும், அவர்களின் பாதுகாப்புடனும் நடைபெறுவதும் அவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

கிளாலிப் பாதையைத் தடை செய்வது வடபகுதித் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளின் ஒன்றான போக்குவரத்து உரிமையை மீறுவதும் மறுப்பதுமாகும்.

மக்களின் போக்குவரத்து உரிமையை மறுப்பது என்பது அவர்களைத் திறந்த சிறைச்சாலையில் கைதிகளாக வைப்பதாகும்.

வடபகுதி மக்களுக்கு இப்படி ஒரு எச்சரிக்கையை விடுத்து, அவர்களைக் கஷ்டமுறச் செய்து,| அடிபணிய வைக்கலாம் என்று அரசு எண்ணக் கூடும். ஆனால் அது நடவாது என்பதை அது உணர நேரிடும்

யாழ்ப்பாணம் வலிகாமத்தை ஆக்கிரமிப்பதற்காகப் பெரும் படை எடுப்பை நடத்திக் கொண்டிருக்கும் வேளை பார்த்து, கிளாலிப் பாதையைத் தடை செய்வதன் உள்நோக்கம் என்ன?

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்ற பெயரில் தமிழ் மக்களைப் படுகொலை செய்ய அரசுப் படைகள் திட்டமிட்டிருந்தன. அது தெரிந்து தமது உயிரப் பாதுகாப்புக் கருதி, இலட்சக் கணக்கான வலிகாமம் மக்கள் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு முன்னேற்பாடகவே இடம்பெயர்ந்தனர்.

அவர்கள் கிளிநொச்சி மற்றும் வன்னிப் பிரதேசங்களுக்குச் செல்வதைத் தடுப்பதே கிளாலிப் பாதைத் தடையின் நோக்கமாகும்.

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பெரும் நிலப்பகுதிக்குச் செல்வதைத் தடுத்து அவர்களைச் 'சிறைப் பிடித்து', படுகொலை செய்வதே அரசின் உள்நோக்கமாகும்.

மக்கள் இல்லாத சூனியப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதனால் ஏற்படும் தோல்வியைச் சமாளிக்க, அதற்குப் பழிவாங்கும் விதத்தில் தமிழர்களைக் கொல்லவே இந்த ஏற்பாடு.

# இடம்பெயர்ந்த அனைவருக்கும் புதிய பங்கீட்டு அட்டை வழங்கப்படும்

## அதன் பின்பே அடுத்த கட்ட விநியோகம்

சாவகச்சேரி, நவ. 25

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள அனைவருக்கும் புதிய பங்கீட்டு அட்டை வழங்கப்பட உள்ளது.

இந்த பங்கீட்டு அட்டைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

▪ வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பலர் பங்கீட்டு அட்டைகளை இழந்துள்ளதாலும்—

இடம்பெயர்ந்துள்ளவர்களை கணக்கெடுக்கும் வகையிலும் —

இடம்பெயர்ந்த சகலருக்கும் புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ள பகுதி கிராம சேவையாளரிடம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பதிவு செய்து பங்கீட்டு அட்டையை பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்ட பின்னரே அடுத்த கட்ட விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ 3)

# மண் மீட்புப் போரில் ஆசிரியர் - மாணவர்கள்

சாவகச்சேரி, நவ. 25

மண்மீட்புப்போரில் ஏராளமான பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேற்று இணைந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டுள்ள அட்டூழியங்களை உணர்ந்து கொண்டு மாணவர்கள், ஆசிரியர்கள், இளைஞர், யுவதிகள் என்று ஏராளமானவர்கள் விடுதலைப்புலிகளுடன் இணைகிறார்கள்.

ஏராளமான பெற்றோர்களும் தாமாக முன்வந்து தமது பிள்ளைகளை மண் மீட்புப் போருக்காக விடுதலைப்புலிகளுடன் இணைத்து வருகின்றனர். (இ-3)

# சந்திரிகா சில தினங்கள் தலைமறைவானது ஏன்?

## பாதுகாப்புக் காரணத்துக்காம்

கொழும்பு, நவ. 25

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம் புதன்கிழமை முதல் சில தினங்களுக்கு தலைநகர் கொழும்பிலிருந்து 'மாயமாக' மறைந்து போனார் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சத்திலேயே எவருக்கும் சொல்லிக்கொள்ளாமல் சில தினங்களுக்கு ஜனாதிபதி தலைமறைவானார் என்று கூறப்பட்டது.

''இது நிச்சயமாக பாதுகாப்பு முன்னேற்பாடாகத்தான் செய்யப்பட்டது'' — என்று ஜனாதிபதியின் உதவியாளர் ஒருவர் குறிப்பிட்டதாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது. (உ)

# ஓய்வூதியக் கொடுப்பனவு

சாவகச்சேரி, நவ. 25

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் திறக்கப்பட்டுள்ள ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான கருமபீடங்கள் இன்றும் செயற்படும்என்று யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்று ஒரு தொகுதி ஓய்வூதியர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் —

இன்றும் ஒரு தொகுதியினருக்கு வழங்கப்படும் என்றும்—

ஏனையோருக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

# முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

சாவகச்சேரி, நவ. 25

இடம்பெயர்ந்த, இடம்பெயராத முன்பள்ளி ஆசிரியர்கள், இணைப்பாளர் ஆகியோருக்கான கலந்துரையாடல்கள் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி இயற்றாலை வீட்டுத்திட்டம், கைதடி வளாகம், பச்சிளைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றில் இயங்கும் அலுவலகங்களில் ஏதாவது ஒன்றில் கலந்து கொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளி ஆசிரியர்களைக் கேட்டுள்ளது. (இ-3)

# சூறாவளி

கொழும்பு, நவ. 25

வங்காளவிரிகுடாவிலிருந்து உருவாகி உள்ள சூறாவளி இன்று பங்களாதேஷ் கரையைக் கடக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்கா வெளியிட்ட கருத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாண மாவட்டத்திலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புகள் ஒன்றிணைந்த யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள் ஒன்றியமாகிய நாம், உலக அரசியலில் ஜனநாயகத்திற்கும், தனிமனித சுதந்திரத்திற்கும் அதி உன்னதமுக்கியத்துவம் கொடுத்து வருகின்ற ஐக்கிய அமெரிக்கக் குடியரசினதும் அதன் தலைமைத்துவத்தை ஏற்றிருக்கும் தங்களினதும் கவனத்திற்கு அவசரமானதும் அவசியமானதும் ஆகிய இச்செய்தினய அனுப்பி வைக்கின்றோம்.

### ஐந்தரை லட்சம் பேர் அகதிகளாயினர்

ஸ்ரீலங்காவின் தேசிய இனமாகிய தமிழ் பேசும் மக்கள் தங்களின் அரசியல் உரிமைகளுக்காக நீண்டகாலமாக போராடி வருவதை தாங்கள் அறிவீர்கள். ஸ்ரீலங்கா இராணுவத்தின் அழிவுகளுக்கும் அட்டூழியங்களுக்கும் முகம் கொடுக்க முடியாமல் உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் வெறுங்கையுடன் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பகுதிகளில் மரங்களின் கீழும், தெருவோரங்களிலும் சுமார் ஐந்தரை லட்சம் மக்கள் அல்லலுற்று அகதிகளாகியுள்ளனர்.

இவ்வேளையில் தங்கள் வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய விவகாரங்களுக்கான பணியகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ஒரு சில தினங்களுக்கு முன் விடுதலைப் புலிகள் தொடர்பான செய்தியை வெளியிட்டதாக ஸ்ரீலங்கா அரசு தொடர்பு சாதனங்கள் பிரசாரம் செய்கின்றன. உண்மைக்குப் புறம்பான இச்செய்தி தமிழ்மக்களுக்கு பேரதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது ''விடுதலைப் புலிகளால் யுத்த நிறுத்தம் மீறப்பட்டுள்ளது; விடுதலைப் புலிகளின் விடாப்பிடியான போக்கும் வன்செயலுக்கு தூபமிடும் நிலையும் தான் தமிழர்களின் அவல நிலைக்கு காரணம்'' — என அந்த பெயர் குறிப்பிடப்படாத அதிகாரி கூறியுள்ளார்.

### வாக்குறுதியை மீறிய சந்திரிகா அரசு

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேசி தீர்வு காண்பேன் என மக்களால் ஆணை பெற்று, பதவிபெற்று, பதவி ஏற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கொடுத்த வாக்குறுதியை மீறி இன்று யுத்தத்தை தீவிரப்படுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமார் மூன்று மாதங்கள் தாக்குதல் நிறுத்தம் உடன்பாடு அமுலில் இருந்தது. இக்காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் சந்திரிகா அரசு ஈடுபடாமல் மாறாக யுத்த நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியது. இது தமிழ் மக்களுக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

### தாக்குதல் நிறுத்தம் இருந்த வேளை ஸ்ரீலங்கா அரசு எடுத்த செயற்பாடுகள்:

★ 90 நாள்கள் தாக்குதல் நிறுத்தம் இருந்த வேளை இருநூறுக்கு மேற்பட்ட தாக்குதல் மீறல்கள்; இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு; யுத்தத்திற்கு 2500 கோடி ரூபா வரவு செலவில் ஒதுக்கீடு.

★ இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் உண்மையான முறையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடாமை.

★ தாக்குதல் நிறுத்தத்தை நிரந்தர போர் நிறுத்தமாக மாற்றி, தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளை தீர்க்கத் தவறியமை.

இதன் காரணமாக விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசு மீது சந்தேகம் கொண்டனர். பேச்சுவார்த்தை என இழுத்தடித்து, இராணுவ ரீதியாக தமிழ்இனஅழிப்பைச் செய்து, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நசுக்கலாம் என எண்ணங்கொண்டனர். இதைப் புரித்துகொண்ட விடுதலைப்புலிகள் கடந்த காலங்களைப் போன்று சந்திரிகாவின் அரசும் ஏமாற்ற முனைகிறது என எண்ணி 21 நாள்கள் காலக்கெடு வித்திதனர்.

இக்காலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளான —

பொருளாதாரத் தடை, போக்குவரத்துப் பாதை தடை என்பவற்றை நீக்குமாறு புலிகள் வலியுறுத்தினர். ஆனால் ஸ்ரீலங்கா அரசு அக்கறை காட்டவில்லை. இதன் காரணமாக தாக்குதல் நிறுத்த உடன்பாடு முறிவடையவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு தீர்வு காண முடியாமல், இழுத்தடித்து இராணுவ தீர்வுக்கு இட்டுச்சென்றது சந்திரிகா அரசு. எனவே யுத்த நிறுத்தம் மீறப்பட்டதற்கு சந்திரிகா அரசின் பொறுப்பற்ற செயலே காரணம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

### 50 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர்

இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவலங்களுக்குக் காரணம் ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவ ஆக்கிரமிப்பும்தான். இன்று வடக்கு, கிழக்கு பகுதியை பெருமளவு இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

இதுவரை நிகழ்ந்த இந்தப் போரினால் 50 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கோடானு கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன; வளங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன; நாடு முழுவதிலும் 15 இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாயுள்ளனர்; அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

கடந்த 6 வருடங்களாக ஸ்ரீலங்கா ராணுவம் வடக்கு, கிழக்கு பகுதிகளில்பல பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டுள்ளது; வன்முறைகளை தூண்டிவிட்டு தமிழ் இன அழிப்பை செய்திருக்கிறது.

இன்று தமிழ்மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, அவலவாழ்வு வாழ்வதற்குக் காரணமாக இருப்பவை ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவமும் தான். அப்படி இருக்க, உண்மைக்குப் புறம்பாக விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தியுள்ளமை ஏற்புடையதல்ல என்பதனையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

### ஸ்ரீலங்கா ராணுவத்துக்கு கண்டனம்

ஸ்ரீலங்கா இராணுவத்தினது படுகொலைகளை சர்வதேச மனிதஉரிமை நிறுவனங்கள் கண்டித்துள்ளமையையும் இதுபற்றி ஸ்ரீலங்கா அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காததையும் ஞாபகப்படுத்துகின்றோம்.

18. 02. 95 அன்று யாழ். நகரில் லட்சக்கனக்கான மக்கள் அணிதிரண்டு, பேரணி ஒன்றை நடத்தி, ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு சில கோரிக்கைகளை முன்வைத்து, சமாதான முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறு கோரியிருந்தோம். ஆனால் அவர் அக்கறை காட்டவில்லை.

உலகில் ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் முதன்மைப்படுத்தும் ஐக்கிய அமெரிக்க தேசத்திலிருந்து ஓர் உத்தியோகபூர்வ அதிகாரியினால் தமிழ்மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு எதிரான முறையில் வெளியிடப்பட்ட கருத்தின் பாதிப்பை நிவர்த்தி செய்யும் வகையில் தாங்கள் உரிய நடவடிக்கையில் ஈடுபடுவீர்கள் என நம்புகிறோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை பாலசுந்தரம்

(Retired A C C D.)

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஊரெழு கிழக்கில் வசித்தவருமாகிய தாமோதரம் பிள்ளை பாலசுந்தரம் 23-11-95 அன்று காலமானார்.

இவர் திருமதி அன்னரட்ணத்தின் கணவரும் சிவபாலன் (கனடா), ஜெயசீலன் (சவூதி) ஆகியோரின் தந்தையும், சுபாசினியின் அன்பு மாமனாரும் கோபிசங்கரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-11-95 நேற்று பிற்பகல் 2 மணிக்கு அல்வாய் தெற்கில் நடைபெற்றன.

தகவல்:
மனைவி

தற்போதைய முகவரி:
குமிழடிப் பிள்ளையார் கோயிலடி,
அல்வாய் தெற்கு,
அல்வாய். (39375)

## கந்தையா தர்மலிங்கம்

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா தர்மலிங்கம் அவர்கள் 24-11-95 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், ஜெயரட்ணத்தின் (துரையம்மா) அவர்களின் அன்புத் தந்தையும், தம்பிராஜாவின் மாமனாரும், சாந்தா (கனடா), கருணாகரன் (சுவிஸ்), தயாபரன் (ஜேர்மனி), பிரபாகரன் (கனடா), சுகந்தினி (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம், 3 ஆம் வருடம் வர்த்தகத்துறை), சதீஸ்வரன் (ஈசன்), மாவீரன் லெப். சிவா (சிவம்), நவபாலன் [கனடா], அருட்செல்வி (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், சிந்துஜன் [கனடா], நீரோஜன் (கனடா), சாருஜன் [கனடா] ஆகியோரின் பூட்டனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25-11-95 காலை 10 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தம்பிராசா
(மருமகன்)

தற்போதைய முகவரி;
செ. கமலநாதன்
கணபதி களஞ்சியம்,
புதிய ஸ்ரேசனடி,
மீசாலை. (39378)

## வேலுப்பிள்ளை மங்கையர்க்கரசி

'செல்வஸ்தான்' சித்தன்கேணியை சேர்ந்தவரும், தற்போது மந்திகையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான திருமதி வேலுப்பிள்ளை மங்கையர்க்கரசி 23-11-95 (வியாழன்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கினிகத்தனை ஓவசியர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், செல்வலட்சுமி [சிங்கப்பூர்], விஜயலட்சுமி, ஜெயலட்சுமி, அன்னலட்சுமி, காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன், முத்துலட்சுமி, Dr. சிறிராஜேஸ்வரன் (S. M. O. - O. P. D. - யாழ். போதனா வைத்தியசாலை), இரத்தினேஸ்வரன் [வெஞ்சன்] சோமேஸ்வரன் (ஆசிரியர்- ஹட்டன்), விக்னேஸ்வரன் [ஜேர்மனி], ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஸ்டேசன் மாஸ்டர் நாரயாணசாமி, நவரட்ணம் [பிரபல வர்த்தகர்], காலஞ்சென்ற இரத்தினம்மா, தங்கரத்தினம் குமாரசாமி [சட்டத்தரணி - தொல்புரம்] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-11-95 வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. சிறிராஜேஸ்வரன்
(மகன்)

(39380)

## பொன்னு வேலுப்பிள்ளை

அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும், யாழ். கொழும்புத்துறை, வளன்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட, பொன்னு - வேலுப்பிள்ளை 24-11-95 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக்கணவரும், கந்தசாமியின் சகோதரரும், செல்வராணி (ஹொலண்ட்) சிவஞானம், ரஞ்சினி (ஆசிரியை - சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம், யாழ்) சந்திரகுமார் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்லத்துரை, (சிவராசா ஹொலண்ட்) திருஞான செல்வம், [இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்], துரைமதி, (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புமாமனாரும், சுகந்தினி, சாந்தி பூஷன், லக்ஷனா, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 25-11-95 சனிக்கிழமை பகல் 12 மணியளவில், மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு திருச்செல்வம் ஆசிரியர் அவர்களின் இல்லத்தில் இருந்து தகனக்கிரிகைகளுக்காக, நுணாவில் குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சி. திருஞானசெல்வம்

[39381]

# 100 கோடி ரூபா திரவப் பணத்தை அனுப்ப அரச அதிபர் கோரிக்கை

குடாநாட்டில் நிலவும் பணத்தட்டுப்பாட்டினால் அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் தமது கொடுப்பனவுகளை பெறமுடியாத நிலையில் உள்ளதால் —

உடனடியாக 100 கோடி ரூபா திரவபணத்தை அனுப்புமாறு யாழ். அரச அதிபர் கோரியுள்ளார்.

இது தொடர்பான அவசர செய்தி ஒன்றை வடமாகாணத்துக்குபொறுப்பான பிரதி அத்தியாவசிய நாயகம் திரு. சேனரத்தினாவுக்கு நேற்று அரச அதிபர் அனுப்பி வைத்தார்.

குடாநாட்டில் திரவ பணத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் அரச ஊழியர்கள் தமது சம்பளத்தைப் பெறமுடியாதுள்ளனர் என்றும் —

ஓய்வூதியர்களும் தமது கொடுப்பனவை பெறமுடியாதுள்ளனர் என்றும் — அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## சாவகச்சேரிப்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெயர்ந்திருந்ததால் ஏற்பட்ட சோகத்தாலும் பொருள் இழப்பாலும் அவர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருந்த இந்த நேரத்தில் — அவர்களை மேலும் துன்பப்படுத்தும் விதத்தில் அமைந்துவிட்ட — இந்த வெடி விபத்து எமது இயக்கத்திற்கு பெரும் மனவேதனையை ஏற்படுத்தி உள்ளது.

எனினும், விபத்து நடந்த இடமும் நேரமும் சனநெரிசலைக் கொண்டிருந்த போதிலும் விபத்தால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் மிகக் குறைவு என்பது எமக்கு சிறிது ஆறுதலைத் தருகின்றது.

இந்த வெடிவிபத்தில் பலியாகிய —

★ கனகசபை சண்முகசுந்தரம் (வயது51) —ஓட்டுமடம்

★ சண்முகசுந்தரம் சிவரூபன் (வயது 13) — ஓட்டுமடம்.

★ பரமானந்தம் (வயது46) — அரியாலை.

★ பரமானந்தம் நாகேஸ்வரி (வயது 40) — அரியாலை

ஆகியோரது குடும்பங்களின் வேதனையிலும் பிரிவுத் துயரிலும் புலிகள் இயக்கம் பங்கு கொள்கின்றது.

இதேவேளை —

மக்களது உயிர்களுக்கோ உடைமைகளுக்கோ சேதத்தை ஏற்படுத்தும் இத்தகைய வெடி விபத்துக்கள் எதிர்காலத்தில் ஏற்படா வண்ணம் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் புலிகள் இயக்கம் எடுத்துள்ளது என்பதை எமது அன்புக்குரிய மக்களுக்கு அறியத்தருகின்றோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தப்பி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீண்டும் வந்து சேர்ந்து கொண்டால் அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது. (இ)

## துண்டியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரியாலை புங்கன்குளம் பகுதியில் தமது நிலைகளைப் பலப்படுத்திய படையினர் அங்கிருந்து கொழும்புத்துறை நோக்கி நேற்றுக் காலை முன்னேறியபோது—

படையினரை துண்டிச் சந்திப் பகுதியில் நண்பகலில்லை வழிமறித்து புலிகள் கடும் சமர் புரிந்ததாகக் களச் செய்திகள் தெரிவித்தன.

இச்சமரில் படையினருக்கு கணிசமான இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினர் நேற்று மேற்கொண்ட அகோர ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதலால் நகரில் மக்களின் உடைமைகள் மற்றும் சொத்துக்கள் பெருமளவில் நாசமாகின என்றும் தெரியவந்தது.

நகரப்பகுதி எங்கும் கட்டடங்களின் இடிபாடுகளும், முறிந்த மரங்களும் காணப்படுவதாகவும் —

சிதைவடைந்த நிலையில் யாழ். நகர் காட்சியளிப்பதாகவும்— களச் செய்திகள் தெரிவித்தன.

படையினர் ஆக்கிரமித்துள்ள புத்தூர், கோப்பாய் பகுதிகளிலும் நேற்று ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரியவந்தது. (இ-3)

## அரசின் கைக்கூலியாக தமிழ் எம். பி ஒருவர்...!

கொழும்பு, நவ. 25

ஸ்ரீலங்கா அரசாங்கம் யாழ்ப்பாணத்தின் மீது பெரும் படை எடுப்பு ஒன்றை நடத்தி —

தமிழ் மக்களை இனப் படுகொலை செய்தும், அவர்களின் சொத்துக்களை நாசம் செய்தும், உடைமைகளைச் சூறையாடியும் வரும் வேளையில் —

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சியின் எம். பியும், காலஞ்சென்ற அமைச்சர் திருச்செல்வத்தின் அருமைப் புத்திரருமான கலாநிதி நீலன் திருச்செல்வம் —

அமைச்சர் ஜி. எஸ். பீரிஸுடன் சேர்ந்து —

இனப் பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வு யோசனைக்கு — ஆதரவு திரட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

கொழும்பில் உள்ள தனியார்துறை பிரமுகர்களை அழைத்து தீர்வு யோசனையை நிறைவேற்ற அரசுக்கு ஆதரவு திரட்டும் மாநாடு ஒன்றை அமைச்சர் பீரிஸ் தமது உத்தியோபூர்வ வாசஸ்தலத்தில் இம்மாத முற்பகுதியில் நடத்தினார்.

அமைச்சர் பீரிஸ் தமக்குத் துணையாக அமைச்சர்கள் இருவரையும், கலாநிதி நீலன் திருச்செல்வத்தையும் வைத்திருந்தார்.

இந்த மாநாட்டில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பில் உள்ள பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

தேசியவிவகாரமான இனப் பிரச்சினையில் அரசின் யோசனைக்கு தனியார்துறை ஆதரவு வழங்குவது பொருத்தமானதல்ல என்று தனியார் துறைப் பிரமுகர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால் தனியார்துறை ஆதரவு அவசியம் என்று விளக்கும் பொறுப்பை அமைச்சர் பீரிஸ் கலாநிதி நீலனிடம் ஒப்படைத்தார்.

தனியார்துறைப் பிரமுகர்களின் கருத்துக்களை வெட்டிப் பேசிய நீலன், தீர்வு யோசனையை ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களையும் நீட்டி, முழக்கி, விளக்கினர்.

தமிழ் மக்கள் வாழ்வா சாவா என்று அவலப்பட்டுக் கொண்டிருக்க —

அவர்களின் பிரதிநிதி என்று சம்பளமும் சலுகைகளும் பெறும் ஒருவர்—

அரசின் அரை வேக்காட்டு தீர்வு யோசனைக்கு ஆதரவு தேடி வருவது — அரசின் கைக்கூலியாக இருந்து, அதற்கு வாக்காலத்து வாங்குவது — துரோகத்தனமானது. வெட்கக் கேடானது என்று கொழும்பில் தமிழ்ப் பிரமுகர்கள் கவலையும் கண்டனமும் தெரிவிததனர்.

## பிரதேச சபை ஊழியர் நடத்திய எதிர்ப்பு இயக்கம்

இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியிருக்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஊழியர்கள் நேற்று கொடிகாமம் வலய உதவி அரசாங்க அதிபர் பணிமனை இயங்கும் மிருசுவில் பிரதேச சபை அலுவலகம் முன் அமர்ந்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாரும் கொடிகாமம் வலய மேலதிக அரசாங்க அதிபருமாகிய திரு. கா. சந்திரராசாவின் சமரசத்தை அடுத்து இவர்கள் தமது எதிர்ப்பைக் கைவிட்டனர்.

இடம்பெயர்ந்து ஒரு மாத காலமாகி தென்மராட்சியில் தங்கி இருந்தும் தமக்கு சம்பளமோ அல்லது எந்த நிவாரமோ வழங்கப்படாததை ஆட்சேபித்தே இவர்களது எதிர்ப்பு இயக்கம் நடத்தப்பட்டது.

ஒரு மணி நேர நடவடிக்கையின் பின்னர் தமது எதிர்ப்பை இவர்கள் கைவிட்டனர் [இ-12]

## புனாணையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

...ப்பற்றப்பட்டன.

இந்தத் தாக்குதல் குறித்து பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் அமல் ஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் கிழக்கில் தாக்குதலை விரிவுபடுத்தி உள்ளனர் என்பது புலனாகிறது என்றார்.

## வீர வணக்கம்

### வீரவேங்கை - விக்ரம் (பொழிலன்)

(முன்னாள் யாழ் தையல் தொழிலக பொறுப்பாளர்)

இவர் 22-11-95 சூரியகதிர் இராணுவ நடவடிக்கையில் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். அடுக்கணி வாணிபம்
தென்மராட்சி

(39377)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 25-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org